# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2339/31 - 2023 ජූලි මස 07 වැනි සිකුරාදා - 2023.07.07

*2339/31 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.-பி. 3/2021* (II)

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்***

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 27, 36, 37, 39, 40 மற்றும் 64 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளினதும் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I

## அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலனவான பங்கிலாபங்கள் அல்லது வேறு நிதிசார் நன்மைகள்

2. சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லது கம்பெனியொன்று, அவ்வுட்பிரிவின்கீழ் அத்தகைய முதலீட்டின் பாகமாகவமைகின்ற முதலீட்டின் மீது ஒரு பங்கிலாபத்தை அல்லது வேறேதேனும் நிதிசார் நன்மையை இலங்கை ரூபாக்கள் தவிர்ந்த பெயர்குறிக்கப்பட்டவொரு வெளிநாட்டு நாணயத்தில் முதலீட்டாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

3. சட்டத்தின் 39 ஆம் பிரிவின்கீழ் ஆளொருவருக்கு அல்லது கம்பெனியொன்றுக்கு ஆணைக்குழுவானது சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியைக் குத்தகைக்குக் கொடுத்து ஒரு பங்கிலாபம் அல்லது வேறேதேனும் நிதிசார் நன்மையானது, செலுத்தப்பட்ட குத்தகைத் திகதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றினுள் முதலீட்டாளருக்குத் திரளுகின்றவிடத்து, அத்தகைய பங்கிலாபம் அல்லது வேறு நிதிசார் நன்மையானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றுடன் முதலீட்டாளரின் பெயரில் பேணப்பட்ட அத்தகைய முதலீட்டாளரின் வதிவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினுள் அனுப்பப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## இலங்கை ரூபாக்களைப் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக மாற்றுதல்

4. கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் இலங்கைப் பிரசையொருவருக்கு அல்லது வதிவுள்ளவரொருவருக்கு வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில், பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, இலங்கை ரூபாக்களிலான கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளலாம் :-

(அ) அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தொகை, ஓர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியுடன் பேணப்பட்ட இலங்கை ரூபாக் கணக்கொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் ;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் பெறப்பட்ட இலங்கை ரூபாக்கள், அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அவரது வியாபாரத்தின் வழமையான நெறியில் பயன்படுத்தப்படலாம் ; அத்துடன்

(இ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகை, உரிமம்பெற்ற ஒரு வர்த்தக வங்கியினூடாக மட்டுமே ஒரு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக மாற்றப்படலாம்.

## பாகம் III

## அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் இலங்கைப் பிரசையொருவருடன் அல்லது வதிவுள்ளவரொருவருடன் வியாபாரத்தில் ஈடுபடுதல்

5. சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரசையொருவருடன் அல்லது வதிவுள்ளவரொருவருடன் இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், அத்தகைய நோக்கத்துக்காக ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், ஆணைக்குழுவானது, அதன்கண் அடங்கியுள்ள கருமங்களைக் கவனத்துட்கொண்ட பின்னர், ஒன்றில் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அத்தகைய வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு எழுத்திலான அதிகாரவளிப்பொன்றை வழங்க மறுத்தல் வேண்டும்.

7. ஆறாம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அதிகாரவளிப்பொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் -

(அ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரசையொருவருடன் அல்லது வதிவுள்ளவரொருவருடன் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற தனி நோக்கத்துக்காக வியாபாரத்தில் ஈடுபடுதலாகாது ; அத்துடன்

(ஆ) கொழும்பு துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஓர் இலங்கைப் பிரசையல்லாத அல்லது வதிவுள்ளவரொருவரல்லாத ஆட்களுடன் கொண்டுநடாத்தப்பட்ட வியாபாரத்திலிருந்து, அவரது மொத்த வருமானத்தின் அரைவாசிக்கு மேற்பட்டதை உருவாக்குதல் வேண்டும்.

8. ஆறாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அதிகாரவளிப்பும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

9. ஆறாம் ஒழுங்குவிதியின்கீழ் எந்த அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அதிகாரவளிப்பொன்று வழங்கப்படுகின்றதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அத்தகைய வியாபாரம் தொடர்பாக சட்டத்தின் பாகம் IX இல் அல்லது சட்டத்தின் வேறேதேனும் பாகத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எவையேனும் விலக்களிப்புகளை அல்லது ஊக்குவிப்புகளை உரிமை கோருவதற்கு அல்லது பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது.

10. அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அதிகாரவளிப்பொன்றன் நியதிநிபந்தனைகளுள் எவற்றையும் மீறியுள்ளாரென ஆணைக்குழுவானது திருப்திப்படின், 6 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட அத்தகைய அதிகாரவளிப்பை அது இல்லாதொழிக்கலாம்.

## பாகம் IV

## இலங்கை ரூபாக்களில் பணஞ்செலுத்தப்பட்ட சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியைக் கைமாற்றுதல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கு விடுதல்

11. ஏதேனும் சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியின் குத்தகைக்கான அல்லது கைமாற்றத்துக்கான கொடுப்பனவை இலங்கை ரூபாக்களில் செய்துள்ள, மற்றும் மறுதலையாக, சட்டத்தின் 39 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஆதனத்தை ஒரு மூன்றாந் திறத்தவருக்குக் கைமாற்றுகின்ற, குத்தகைக்குக் கொடுக்கின்ற அல்லது வாடகைக்கு விடுகின்ற ஆளொருவர் அல்லது கம்பனியொன்று, பெயர் குறிக்கப்பட்டவொரு வெளிநாட்டு நாணயத்தில் அவ்வாறு பெறப்பட்ட பணத்தொகையைக் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையிலுள்ள ஓர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியுடன் அத்தகைய ஆளின் அல்லது கம்பெனியின் பெயரில் பேணப்பட்ட வதிவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கினுள் அனுப்புதல் வேண்டும்.

## பாகம் V

## சில்லறை வசதிகளைப் பயன்படுத்துதல்

12. ஓர் இலங்கைப் பிரசை அல்லது வதிவுள்ளவரொருவர், இயைபான கொடுப்பனவுகளை இலங்கை ரூபாக்களில் செய்வதன்மேல் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்ட சில்லறை வசதிகளை அல்லது சேவைகளைப் பயன்படுத்தலாம்.

13. பன்னிரெண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் பெறப்பட்ட பணத்தொகைகள், ஓர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினூடாக ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக மாற்றப்படலாம், அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வியாபாரத்தினது வழமையான நெறியில் பயன்படுத்தப்படலாம்.

14. பன்னிரெண்டாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட சில்லறை வசதிகள் அல்லது சேவைகள், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தீர்வையற்ற சில்லறை வசதிகளை அல்லது சேவைகளை உள்ளடக்குதலாகாது.

## பாகம் VI

## இடைக்கால வழிமுறைகள்

15. (1) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, 2026, மே 26 ஆந் திகதி வரை, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் பெயர் குறிக்கப்பட்டவோர் அமைவிடத்திலிருந்து வியாபாரத்தில் ஈடுபடலாம்.

(2) ஓராம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரமொன்று, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதும் அதிலிருந்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றதுமான ஒரு வியாபாரத்துக்கு அளிக்கப்பட்ட எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையதாதலும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதும் அதிலிருந்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றதுமான ஒரு வியாபாரமாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதலும் வேண்டுமென்பதுடன் சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாலும் வேண்டும்.

## பாகம் VII

## பொருள்கோடல்

16. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் என்று பொருளாகும் ;

"ஆணைக்குழு" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்று பொருளாகும் ;

"தீர்வையற்ற சில்லறை வசதிகள் அல்லது சேவைகள்" என்பது, ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்வையற்ற உரிமமொன்றை உடைமையில் வைத்திருக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளினால் வழங்கப்பட்ட சில்லறை வசதிகள் அல்லது சேவைகள் என்று பொருளாகும் ;

"சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி" என்பது, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள அரசாங்கச் சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியும் கருத்திட்டக் கம்பெனிச் சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியும் என்று பொருளாகும் ;

"வதிவுள்ளவர்" என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"வதிவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கு" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மற்றும் 2022 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கப் பணிப்புகளின் நியதிகளின்படி திறக்கப்பட்டு பேணப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தவிர, ஓர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியுடன் முதலீட்டாளரொருவரினால் வைத்திருக்கப்பட்டவொரு வெளிநாட்டு நாணயக் கணக்கு என்று பொருளாகும் ; அத்துடன்

"சில்லறை வசதிகள்" என்பது, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள்ளான சிற்றுண்டிச்சாலைகள், சினிமாக்கள், களியாட்ட வசதிகள், பொருட் கொள்வனவு வசதிகள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் என்று பொருளாகும்.

EOG 07-0033

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.